

யாழ்ப்பாணம் - அரியாலையூர்,

# திருமதி பூரணம் – சுப்பிரமணியம்

அவர்களின்

# பூரண மலர்

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் ஹ்ரூம் பட்

உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - அரியாலை,
கச்சேரி கிழக்கு ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும்,

வாழ்விடமாகவும் கொண்ட

அமரர்

# திருமதி பூரணம் – சுப்பிரமணியம்

அவர்களின்

# பூரண மலர்

02-05-2006

# சமர்ப்பணம்

பாரினிலே பிறந்து
பாசத்துடனும் நேசத்துடனும் வாழ்ந்து
எம்மிருவரையும் பெற்று
பொறுப்புடன் வளர்த்து
உங்களை ஒடுக்கி
கோபுரம்போல் எங்களை உயர்த்தி
"தாயிற் சிறந்ததோர் கோயில் இல்லை"
என்று வாழ்ந்து தெய்வமாகிவிட்ட
எம் தாயின் பாத கமலங்களில்
இம் மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

- பிள்ளைகள்.

உ
சிவமயம்

# அன்னை ஓர் ஆலயம்



மலர்வு
07.06.1917

உதிர்வு
02.04.2006

# திருமதி பூரணம் சுப்பிரமணியம்

## திதி வெண்பா

பார்த்திப ஆண்டு பங்குனித் திங்கள்
பூரணைக்கு முன்னான பஞ்சமித் திதியதனில் - சீரார்புகழ்
பூரணம் தங்கம்மா இவ்வுலகம் விட்டுப்
போய்ச்சேர்ந்தாள் பரிபூரணன் தாள்.

உ
சிவமயம்



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே.

## தேவாரம்

சலம்பூ வொடு தூபமறந் தறியேன்
தமிழோ டிசைபா டல்மறந் தறியேன்
நலந்தீங் கினுமுன் னைமறந் தறியேன்
உன்னா மமென்னா வின்மறந் தறியேன்
உலந்தார் தலையிற் பலிகொண் டுழல்வாய்
உடலுள் ளுறுகு லைதவிர்த் தருள்வாய்
அலந்தே னடியே னதிகைக் கெடில
வீரட்டானத் துறை யம்மானே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாயசிவபத மளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருழுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள தித்திக்குந் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்கு ஆக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம்பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

### வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

உ

## திருமதி பூரணம் – சுப்பிரமணியம் அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

இந்துமகா சமுத்திரத்தின் கண்ணே மாணிக்க முத்தாக விளங்கும் இலங்கைத் தீவின் வடபால் யாழ்பாடி பரிசாகப் பெற்ற யாழ்ப்பாணத்தை நோக்கி வருவோரை "வா" என இருகரம்நீட்டி வரவேற்கும் நீர் நிறைந்தும், கதிர் நிறைந்தும் விளங்கும் வயல்களையும் தென்னை. பனை, மா, பலா, கமுகு என விளங்கும் மரங்களையும், தன் அடியார்களுக்கு அருள்பாலிக்கும் பல திருக்கோயில்களையும், கல்விக்கூடங்களையும், கற்றோர் பலரையும், விளையாட்டு வீரர்களையும் தன்னகத்தே கொண்டு பரந்து விரிந்து விளங்கும் ஊரே நம் அரியாலைக் கிராமம்.

இத்தகு சிறப்பு வாய்ந்த அரியாலையில் உயர் வேளாளர் குலத்தில் தோன்றிய செல்லப்பா - சின்னம்மா தம்பதியரின் மூத்த மகளாக **பூரணம்** தோன்றினார். இவரின் அண்ணனாகக் கைலாச பிள்ளையும், தம்பிமார்களாக ஆறுமுகம் (பொன்னு), செல்லத்துரை, கனகரத்தினம் (குழந்தை) ஆகியோரும், தங்கையாக தங்கரத்தினம் (இரத்தினம்) என்பவரும் தோன்றினர்.

சிறு வயதிலேலே நற்பண்பும், நற்குணங்களும் சகோரத பாசமும் கொண்டவராக விளங்கியதால் (தங்கக் குணங்கொண்ட) "தங்கம்மா" என அயலவரால் அன்பாக அழைக்கப்பட்டார்.

தந்தையார் இறந்த பின்பு சகோதரர்களே பூரணத்தின் (தங்கம்மா) திருமணத்திற்கு மணமகன் தேடினர். அவ்வேளையில் உரிய மணமகனாக அவ்வூர் சின்னத்தம்பியின் மகன் சுப்பிரமணியம் என்பவரை தேர்ந்தெடுத்துத் திருமணம் செய்து வைத்தனர்.

இல்லற வாழ்வில் இணைந்ததன் பயனாய் சுப்பிரமயணிம் - பூரணம் தம்பதியினருக்கு அம்பாளின் திருவருளினால் மூத்த மகளாக தேவகியும் (ராசாத்தி), இளைய மகளாக அம்பிகாவும் (கிளி) வாய்க்கப் பெற்றனர். இருவரையும் கண்ணின் மணிபோல் காத்து நற்பண்பு உடையவர்களாக வளர்த்தெடுத்தார்.

தனது கணவனின் பிரிவின் பின்னர் மனம் தளராது மிகுந்த சிக்கனமாவும், பொறுப்புடனும் வாழ்ந்து வந்தார். தனது மக்களுக்கு

பொறுமை, கண்ணியம், சகோதரத்துவம் என்பனவற்றையும் கற்றுக் கொடுத்து இரு புதல்வியரையம் தோழியர்களாகவும் கண்டு மனம் மகிழ்ந்திருந்தார்.

திருமண வயது அடைந்த தன் மக்களுக்கு அவர்கள் விரும்பிய மணமக்களையே வாழ்க்கைத் துணைவர்களாக ஆக்கிக்கொண்டார். இதன் பயனாக மூத்த மகளான தேவகியை கந்தையாவின் மகன் நவரட்ணம் என்பவருக்கும், இளைய மகள் அம்பிகாவை கனகரத்தினம் மகன் மாணிக்கவாசகர் என்பவருக்கும் திருமணம் செய்து வைத்தார்.

மூத்த மகளுக்கு அஜந்தன், சுகந்தன், ஜெயந்தன், தர்சிகா ஆகியோரும், இளைய மகளுக்கு சகிலா, லக்ஷா ஆகியோரும் இவருக்குப் பேரமக்களாக அடைந்தனர். மூத்தமகளின் நல்வாழ்வுக்காக அவரைப் பிரிய மனமின்றி சந்தோசத்துடன் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். மூத்தபேரன் அஜந்தனின் திருமணத்தில் கௌரி (லண்டன்), மூத்தபேத்தி சகிலாவின் திருமணத்தில் சுரேஸ் - மகிந்தா (நோர்வே) ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் கண்டு மனம் மகிழ்ந்திருந்தார்.

இளைய மகளுடன் மிகவும் சந்தோஷமாகவும், ஆதரவாகவும் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த இவர் தனது முதுமை காரணமாக சொற்பகாலம் நோயுற்றிருந்து தனது 90-வது வயதில் வாழ்வில் எல்லா சுகதுக்கங்களையும் கண்டு அனுபவித்து நிறைவு பெற்றவராக இவ்வுலக வாழ்வு போதுமென்றெண்ணி, பார்த்திப ஆண்டு பங்குனி மாதம் 19-ம் திகதி (02-04-2006) ஞாயிற்றுக்கிழமை பூர்வபக்க பஞ்சமித் திதியில் இறைபதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



## என் அன்புத் தெய்வத்தாயே !
## நெஞ்சு பொறுக்குதில்லையே அம்மா...

நீண்ட காலத்திற்குப் பின் மணம்முடித்து என்னை முதற் பிள்ளையாகப் பெற்றெடுத்து "ராசாத்தி" என்று செல்லப் பெயரிட்டு ராசாத்தியாகவே வளர்த்து என் கணவனிடம் மணம் முடித்து வைத்து பெருமைப்பட்ட காலத்தை நினைத்து பார்த்து பூரிப்படைகிறேன் அம்மா !

மூத்தபிள்ளை என்ற காரணத்தினாலோ என்னவோ எனக்கு எவ்வளவு பாசத்தை அள்ளிக்கொட்டி, சீராட்டிப் பாராட்டி வளர்த்த என் அன்னையே ! உங்களைப் போற்ற வார்த்தைகளைத் தேடிக்கொண்டிருக்கின்றேன், முடியவில்லை அம்மா ! என் கணவர் எனக்கு எவ்வளவு ஆறுதல் சொல்வார். எதையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை அம்மா ! என் செய்வேன் ஏது செய்வேன் என்று தவிக்கின்றேன் அம்மா !

16 வருடங்கள் புலம்பெயர்ந்து நான் லண்டனில் வாழ்ந்தாலும் ஒவ்வொரு நிமிடமும் உங்கள் சிந்தனையில் வாழ்ந்தேன். உங்கள் நினைவுதான் என் மனதில் அலை அலையாய் வந்து மோதிய வண்ணமே இருக்கிறது அம்மா ! தொலைபேசியில் உங்களுடன் கதைப்பதும் எனது தங்கையிடம் உங்களைப்பற்றி விசாரிப்பதும் இப்போது ஓய்ந்துவிட்டதே அம்மா !

உங்கள் நினைவுகளையும் நடந்த சம்பவங்களையும் பொக்கிஷமாக வைத்து என் இறுதிமூச்சு அடங்கும்வரை மனதிலே வைத்துப் பூசிப்பேன் அம்மா ! என்னை வளர்த்த வளர்ப்பையும், அள்ளிக் கொட்டிய பாசத்தையும் நினைத்து வாழ்வேன் அம்மா !

நீங்கள் இறக்கவில்லை அம்மா, என் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள் அம்மா. உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்த வண்ணம் இருக்கின்றேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

உங்கள் மூத்தமகள்
"ராசாத்தி"
**தேவகி நவரட்ணம்** (லண்டன்)

## மூத்த மருமகனின் துயரம்

என் அன்புத் தெய்வமே ! அள்ள அள்ளக் குறையாத அன்பு உள்ளம் கொண்ட எனது அருமை மாமியே உங்கள் பிரிவால் என்னை மிகவும் கவலை கொள்ளவைத்த வேளையிலும், இவ்வளவு நீண்ட காலமும் எங்களுடன் வாழ்ந்து உங்கள் முதுமை காலத்தில் இறைவனின் பொற்பாதங்களில் சரணடைந்ததாக நினைந்து கொஞ்சமாவது மனம் ஆறுதலடைந்தது. நீங்கள் வாழ்ந்த காலத்தில் உற்றார் உறவினர்களோடு எவ்வளவு பாசமாகவும், யாருக்கும் மனம்நோக நடக்காமலும், எனது மாமாவை அதாவது உங்கள் கணவரை இழந்தாலும் பிள்ளைகளையே வாழ்க்கை என்று வாழ்ந்தீர்களே ! நீங்கள் உண்மையில் ஒரு தெய்வம்தான் அம்மா.

எனது மனைவி அதாவது உங்கள் மூத்தமகள்தான், நீங்கள் நோய்வாய்ப்பட்டு இருந்த கடைசி நாட்களில் எவ்வளவு ஆறுதல் சொல்லி இருப்பேன். அவரின் கண்ணீரினைத் துடைக்கப் பட்டபாடுகளை ஆண்டவன்தான் அறிவான். நல்லகுணம் கொண்டவர்கள் இறப்பதில்லை. அவர்களைத் தெய்வம் தன்வசம் ஆக்கிக்கொள்ளும். அந்த வரிசையில் நானும் மனைவியும் உங்களை நினைந்து மன ஆறுதலடைகின்றோம். நான் ஏரசாத்தியை மணம்முடித்த காலத்தில் என்னை எவ்வளவு மரியாதையாகவும் பாசமும் காட்டி, வீட்டுக்கு வந்த மூத்த மருமகனாக எவ்வளவு போற்றி நடந்து, எத்தனையோ அறுசுவை உணவுகளைச் சமைத்துப் பரிமாறியதையும் மற்றும் நடந்த எல்லாச் சம்பவங்களையும் மனதில் வைத்து மீட்டிமீட்டி நினைத்துக் கொள்கிறேன்.

என் வாழ்நாள் முழுவதில் "மாமி" என்ற அந்த மதிப்புக்குரிய சொல்லை நான் வணங்கும் என் தெய்வங் களுடன் சேர்த்துப் பூஜிப்பேன்.

உங்கள் ஆத்மா நிச்சயம் சாந்தியடையும் என்ற நம்பிக்கையில் எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

அன்புள்ள மூத்த மருமகன்

**நவரட்ணம்** (லண்டன்)

## எங்கள் உயிருக்குயிரான அம்மம்மாவே !
## உங்களுக்கு பேரப்பிள்ளைகளின்
## கண்ணீர் அஞ்சலி

எங்கள் ஆசை அம்மம்மாவே ! நாங்கள் பிறந்த காலங்களில் உங்கள் மடியில் தவழ்ந்த காலங்களை மீட்டுப் பார்க்கின்றோம். எத்தனை கோடி பிறவி எடுத்தாலும் உங்களை மீண்டும் பெறுவோமா ? உங்களுக்கு ஆண்பிள்ளை இல்லாத துயரத்தை நாங்கள்தான் தீர்த்து வைத்தோம் என்று எவ்வளவு இனிய பண்டங்களை எல்லாம் தயாரித்தும், வாங்கியும், தந்தும் உற்றார் உறவினர் அயலவர்களுக்கெல்லாம் சொல்லிப் பெருமைப்பட்டீர்களே. உங்கள் பிரிவு எம் எல்லோரையும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளதே. நீங்கள் உங்கள் பூரண வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து இறைவனடி சேர்ந்தாலும் உங்கள் பிரிவு எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. நாங்கள் லண்டனில் இருந்து உங்களைப் பார்க்க வந்தபோது எங்களை வாரியணைத்து முத்தமிட்டதை எப்படி நாம் மறந்து எங்களைத் தேற்றுவோம்.

என்றும் எங்கள் மனதில் வாழ்ந்துகொண்டிருக்கும் உங்களை நாம் தெய்வ சந்நிதானத்தில் வைத்து ஆராதனை செய்துகொண்டிருக்கிறோம்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உங்கள் அன்பு
லண்டன் வாழ் பேரப்பிள்ளைகள்
**அஜந்தன்** + (மனைவி) **கௌரி**
**சுகந்தன்**
**ஜெயந்தன்**
**தர்சிகா**

# அம்மா...

பிறந்ததிலிருந்தே உங்கள் அரவணைப்பில் வாழ்ந்து வந்தேன் அம்மா ! கஷ்டத்தில் வாழ்ந்தபோதும் ஒரு குறையுமின்றி எங்களை வளர்த்தீர்கள். எங்கள் சந்தோஷத்திற்காகவே வாழ்ந்து, நாங்கள் விரும்பியபடி திருமணம் செய்து தந்தீர்கள் அம்மா ! எந்தவித பேதமுமின்றி எங்களுடனேயே வாழ்ந்து வந்தீர்கள் அம்மா

இயலாதபோது எனக்கு அடிக்கடி புத்திகூறி நல்வழிப்படுத்தினீர்கள். நீங்கள் எனக்கு "கிளிக்குஞ்சு" என்று பெயர்வைத்து அழைத்தீர்கள். உங்களைப் பார்க்க வீடுதேடி வரும் அனைவருடைய கைககளையும் வாங்கி பாசத்துடன் முத்தத்தையும் கொடுப்பீர்களே. என்னை நீங்கள் பார்த்துக் கொண்டிருந்த வண்ணமே காலதேவன் உயிரைப் பறித்துக் கொண்டான். உங்கள் பிரிவு என்னால் தாங்க முடியவில்லை அம்மா ! உங்கள் குரல் கேட்பது போல் உணர்கின்றேன் அம்மா.

உங்கள் ஆத்மா இறைவனடி சேர நான் நாள்தோறும் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இளைய மகள்
- அம்பிகா
(கிளி)



# என்னால் மறக்கமுடியவில்லை...

மருமகனாக வந்தபோதும் என்னை **"தம்பி மாணிக்கர்"** என அழைத்தீர்கள். சிறு வயதினிலேயே தாயை இழந்த எனக்கு கடந்த 30 வருடமாகத் தாய்ப் பாசத்தை ஊட்டினீர்கள். தம்பி வந்திட்டியா ? சாப்பிட்டியா ? எனக் கேட்கும்பொழுது தாய்ப் பாசத்தை நான் நன்கு அறிந்துகொண்டேன். மருமகனாக இருந்தாலும் என்னை மகனாக நினைத்து உங்கள் இறுதிக் கடமையை அர்ப்பணித்தீர்கள். உங்கள் சேமிப்பில் எங்கள் வாழ்வுக்கு உரமூட்டினீர்கள். இறுதி நேரத்தில் என் பெயரையே உச்சரித்த வண்ணம் இருந்தீர்கள். என் கண்முன்னேயே உங்கள் ஆத்மா பிரிந்தது தாங்கமுடியவில்லை அம்மா ! என் தாய்க்கு என்னால் செய்யமுடியாத கடமைகளை உங்களால் பூர்த்தி செய்தேன் அம்மா !

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

உங்கள் மருமகன்
**- க. மாணிக்கவாசகர்**



# எங்கு சென்றீர்கள் அம்மம்மா...

நாங்கள் பிறந்ததிலிருந்து உங்களுடன் வாழ்ந்து கொண்டிருந்தோம் அம்மம்மா ! எங்களுக்கு சின்னச் சின்னக் கதைகள் சொல்லித் தூங்கவைப்பீர்கள், உணவு ஊட்டுவீர்கள், உங்களுடன் உறங்கவைப்பீர்கள், அம்மம்மா! நாங்கள் கதைத்துச் சிரித்துக் கொண்டிருக்கும்போது உங்களை பகிடி செய்தாலும், எங்களைக் கண்டிக்காது எங்களுடன் சேர்ந்து சிரிப்பீர்கள் அம்மம்மா ! எங்களை அழைக்கும்போதும் செல்லப் பெயர் வைத்து அழைப்பீர்கள் அம்மம்மா நாங்கள் பாடசாலை சென்று வரும்வரை எங்களுக்காகக் காத்துக்கொண்டிருப்பீர்கள் அம்மம்மா !

எங்களுக்காக இவ்வளவுகாலம் இவ்வுலகில்
வாழ்ந்த அம்மம்மாவே !
எங்களை பிரியமனமின்றி
சென்ற அம்மம்மாவே !
எங்களைத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு
எங்கு சென்றீர்கள் அம்மம்மா !
எங்கள் மனதில் உள்ள உங்கள் உருவம்
என்றும் அழியாது அம்மம்மா !

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாள்தோறும் இறைவனை வேண்டுகின்றோம்.

**ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!**

பேரப்பிள்ளைகள்
**- சகிலா** + (கணவர்) **மகிந்தா**
**லக்ஷா**



# அக்காவுக்கு தங்கை.....

எம் அருமை அக்காவே ! எனக்கினிய சோதரியே !
உன்னரிய தங்கை நான் உனையிழந்து வருந்துகின்றேன்
நின்பிரிவை எண்ணியெண்ணி நித்தமும் கலங்குகின்றேன்
உன் பரிவு எனக்கு இனி எப்போது கிட்டுமக்கா ?
கண்தெரியா விட்டாலும் திடகாத்திரமாய் நீ இருந்தாய்
எண்ணற்ற நோயுடன் பல மாத்திரைகள் நாளும் எடுத்தேன்
திண்ணமாய் எண்ணியிருந்தேன் முன்னமாய் மடிவேனென்று
விண்ணகம் விரைந்துசென்று சொற்பனத்தில் சிரிக்கின்றாய்
பெண்கள் இருவருடன் ஆண்கள் நால்வரு
கண்கள் படும்வகையில் களிப்பாய் வாழ்ந்து வந்தோம்
பின்னிப் பிணைந்த எங்கள் பாசவலை பிரிந்து
தன்னந் தனியே தவியாய்த் தவிக்கின்றே
சின்னவளாய் நான் இருந்தாலும் தயக்கமின்றி
என்னை மணம்முடிக்க என்கணவர் கேட்டபோது
கன்னியாய் முன்னின்று என்னைக் கரைசேர்த்தாய்
என் தன்னிகரில்லா அக்காவே என்னே உன்பெருந்தன்மை.

அக்காவே உன் ஆத்மா இறைவனடி சேர
பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

அன்புத் தங்கை
- தங்கரத்தினம் இராசையா
(கனடா)



உ

# ஓம் சக்தி



## மூலமந்திரம்

ஓம் சக்தியே ! பராசக்தியே !
ஓம் சக்தியே ! ஆதி பராசக்தியே !
ஓம் சக்தியே ! மருவூர் அரசியே !
ஓம் சக்தியே ! ஓம் விநாயகா !
ஓம் சக்தியே ! ஓம் காமாட்சியே !
ஓம் சக்தியே ! ஓம் பங்காரு காமாட்சியே !

## 108 போற்றித் திருவுரு

| | | |
|---|---|---|
| 01. | ஓம் ஓம் சக்தியே | போற்றி ஓம் |
| 02. | ஓம் ஓங்கார ஆனந்தியே | போற்றி ஓம் |
| 03. | ஓம் உலக நாயகியே | போற்றி ஓம் |
| 04. | ஓம் உறவுக்கும் உறவானவளே | போற்றி ஓம் |
| 05. | ஓம் உள்ளமலர் உகந்தவளே | போற்றி ஓம் |
| 06. | ஓம் ஓதரிய பொரும் பொருளே | போற்றி ஓம் |
| 07. | ஓம் உண்மைப் பரம்பொருளே | போற்றி ஓம் |
| 08. | ஓம் உயிராய் நின்றவளே | போற்றி ஓம் |
| 09. | ஓம் மருவத்தூர் அமர்ந்தாய் | போற்றி ஓம் |
| 10. | ஓம் மனமாசைத் துடைப்பாய் | போற்றி ஓம் |
| 11. | ஓம் கவலை தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 12. | ஓம் ககனவெளி ஆனாய் | போற்றி ஓம் |
| 13. | ஓம் புற்றாகி வந்தவளே | போற்றி ஓம் |

| | | |
|---|---|---|
| 14. | ஓம் பாலாகி வடிந்தவளே | போற்றி ஓம் |
| 15. | ஓம் பாமரர் துயர் துடைப்பாய் | போற்றி ஓம் |
| 16. | ஓம் பண்ணாகி இசைந்தாய் | போற்றி ஓம் |
| 17. | ஓம் பாமலர் உவந்தாய் | போற்றி ஓம் |
| 18. | ஓம் பாம்புரு ஆனாய் | போற்றி ஓம் |
| 19. | ஓம் சித்துரு அமைந்தாய் | போற்றி ஓம் |
| 20. | ஓம் செம்பொருள் நீயே | போற்றி ஓம் |
| 21. | ஓம் சக்தியே தாயே | போற்றி ஓம் |
| 22. | ஓம் சன்மார்க்க நெறியே | போற்றி ஓம் |
| 23. | ஓம் சமதர்ம விருந்தே | போற்றி ஓம் |
| 24. | ஓம் ஓங்கார உருவே | போற்றி ஓம் |
| 25. | ஓம் ஒருதவத்துக் குடையாய் | போற்றி ஓம் |
| 26. | ஓம் நீள்பசி தவிர்ப்பாய் | போற்றி ஓம் |
| 27. | ஓம் நிம்மதி தருவாய் | போற்றி ஓம் |
| 28. | ஓம் அகிலமே ஆனாய் | போற்றி ஓம் |
| 29. | ஓம் அண்டமே விரிந்தாய் | போற்றி ஓம் |
| 30. | ஓம் ஆன்மீகச் செல்வமே | போற்றி ஓம் |
| 31. | ஓம் அனலாக ஆனாய் | போற்றி ஓம் |
| 32. | ஓம் நீராக நிறைந்தாய் | போற்றி ஓம் |
| 33. | ஓம் நிலனாகத் திணிந்தாய் | போற்றி ஓம் |
| 34. | ஓம் தூறாக வளர்ந்தாய் | போற்றி ஓம் |
| 35. | ஓம் துணிபொருள் நீயே | போற்றி ஓம் |
| 36. | ஓம் காராக வருவாய் | போற்றி ஓம் |
| 37. | ஓம் கனியான மனமே | போற்றி ஓம் |
| 38. | ஓம் மூலமே முதலே | போற்றி ஓம் |
| 39. | ஓம் மனைச்சுழி விழியே | போற்றி ஓம் |
| 40. | ஓம் வீணையே இசையே | போற்றி ஓம் |
| 41. | ஓம் விரைமலர் அணிந்தாய் | போற்றி ஓம் |
| 42. | ஓம் தத்துவங் கடந்தாய் | போற்றி ஓம் |
| 43. | ஓம் சகலமறைப் பொருளே | போற்றி ஓம் |
| 44. | ஓம் உத்தமி ஆனாய் | போற்றி ஓம் |
| 45. | ஓம் உயிர்மொழிக் குருவே | போற்றி ஓம் |
| 46. | ஓம் நெஞ்சம் நீ மலர்வாய் | போற்றி ஓம் |
| 47. | ஓம் நீள் நிலத் தெய்வமே | போற்றி ஓம் |
| 48. | ஓம் துரிய நிலையே | போற்றி ஓம் |

| | | |
|---|---|---|
| 49. | ஓம் துரிய தித வைப்பே | போற்றி ஓம் |
| 50. | ஓம் ஆயிர இதழ்கள் உறைவாய் | போற்றி ஓம் |
| 51. | ஓம் அகிலமெலாம் ஆட்டுவிப்பாய் | போற்றி ஓம் |
| 52. | ஓம் கருவான மூலம் | போற்றி ஓம் |
| 53. | ஓம் உருவான கோலம் | போற்றி ஓம் |
| 54. | ஓம் சாந்தமே உருவாய் | போற்றி ஓம |
| 55. | ஓம் சரித்திரம் மறைத்தாய் | போற்றி ஓம் |
| 56. | ஓம் சின்முத்திரை தெரிப்பாய் | போற்றி ஓம் |
| 57. | ஓம் சினத்தை வேரறுப்பாய் | போற்றி ஓம் |
| 58. | ஓம் கையிரண்டு உடையாய் | போற்றி ஓம் |
| 59. | ஓம் கரைபுரண்ட கருணை | போற்றி ஓம் |
| 60. | ஓம் மொட்டுடைக் கரத்தாய் | போற்றி ஓம் |
| 61. | ஓம் மோனநல் தவத்தாய் | போற்றி ஓம் |
| 62. | ஓம் யோகநல் உருவே | போற்றி ஓம் |
| 63. | ஓம் ஒளியென ஆனாய் | போற்றி ஓம் |
| 64. | ஓம் எந்திரத் திருவே | போற்றி ஓம் |
| 65. | ஓம் மந்திரத் தாயே | போற்றி ஓம் |
| 66. | ஓம் பிணி தவிர்த்திடுவாய் | போற்றி ஓம் |
| 67. | ஓம் பிறவிநோய் அறுப்பாய் | போற்றி ஓம் |
| 68. | ஓம் மாயவன் தங்கையே | போற்றி ஓம் |
| 69. | ஓம் சேயவன் தாயே | போற்றி ஓம |
| 70. | ஓம் திரிபுரத்தாளே | போற்றி ஓம் |
| 71. | ஓம் ஒருதலம் தெரிப்பாய் | போற்றி ஓம் |
| 72. | ஓம் வேம்பினை ஆள்வாய் | போற்றி ஓம் |
| 73. | ஓம் வினையெலாம் தீர்ப்பாய் | போற்றி ஓம் |
| 74. | ஓம் அஞ்சனம் அருள்வாய் | போற்றி ஓம |
| 75. | ஓம் ஆருயிர் மருந்தே | போற்றி ஓம் |
| 76. | ஓம் கண்ணொளி காப்பாய் | போற்றி ஓம் |
| 77. | ஓம் கருத்தொளி தருவாய் | போற்றி ஓம் |
| 78. | ஓம் அருள்ஒளி செய்வாய் | போற்றி ஓம் |
| 79. | ஓம் அன்பொளி கொடுப்பாய் | போற்றி ஓம் |
| 80. | ஓம் கனவிலே வருவாய் | போற்றி ஓம் |
| 81. | ஓம் கருத்திலே நுழைவாய் | போற்றி ஓம் |
| 82. | ஓம் மக்களைக் காப்பாய் | போற்றி ஓம் |
| 83. | ஓம் மனநோயைத் தவிர்ப்பாய் | போற்றி ஓம் |

84. ஓம் எத்திசையும் ஆனாய் போற்றி ஓம்
85. ஓம் இதயமாம் வீணை போற்றி ஓம்
86. ஓம் உருக்கமே ஒளியே போற்றி ஓம்
87. ஓம் உள்ளுறை விருந்தே போற்றி ஓம்
88. ஓம் மலப்பிணி தவிர்ப்பாய் போற்றி ஓம்
89. ஓம் மனங்கனிந்து அருள்வாய் போற்றி ஓம்
90. ஓம் நாதமே நலமே போற்றி ஓம்
91. ஓம் நளினமலர் அமர்வாய் போற்றி ஓம்
92. ஓம் ஒற்றுமை சொல்வாய் போற்றி ஓம்
93. ஓம் உயிர்நெறி தருவாய் போற்றி ஓம்
94. ஓம் நித்தமும் காப்பாய் போற்றி ஓம்
95. ஓம் நேரமும் ஆள்வாய் போற்றி ஓம்
96. ஓம் பத்தினி பணிந்தோம் போற்றி ஓம்
97. ஓம் பரமே உனக்கே போற்றி ஓம்
98. ஓம் வித்தையே விளக்கே போற்றி ஓம்
99. ஓம் விந்தையே தாயே போற்றி ஓம்
100. ஓம் ஏழையர் அன்னை போற்றி ஓம்
101. ஓம் ஏங்குவோர் துணையே போற்றி ஓம்
102. ஓம் காலனைப் பகைத்தாய் போற்றி ஓம்
103. ஓம் கண்மணி ஆனாய் போற்றி ஓம்
104. ஓம் சத்தியப் பொருளே போற்றி ஓம்
105. ஓம் சங்கடந் தவிர்ப்பாய் போற்றி ஓம்
106. ஓம் தத்துவச் சுரங்கமே போற்றி ஓம்
107. ஓம் தாய்மையின் விளக்கமே போற்றி ஓம்
108. ஓம் ஆறாதார நிலையே போற்றி ஓம்

**ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம்**
**ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம் சக்தி - ஓம்**
**ஓம் ! ஓம் !! ஓம் !!!**

குறிப்பு :

குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் இம் மந்திரத்தைப் படித்து அம்பாளின் அருளைப் பெறுக.



## நன்றி நவில்கின்றோம்

கடந்த 02-04-2006ல் இறைநிழல் சென்றடைந்த
எங்கள் குடும்ப ஒளிவிளக்கு

**திருமதி பூரணம் - சுப்பிரமணியம்** அவர்கள்

- இறைபதமடைந்த செய்திகேட்டு உடனே வந்து உதவிகள் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்களுக்கும்,
- இறுதிச் சடங்கிலும், இறுதி ஊர்வலத்திலும் கலந்துகொண்டோர்க்கும்,
- இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள முடியாமல் தமது அனுதாபங்களை தொலைபேசி, தொலைநகல் மூலமாகத் தெரிவித்தோர்க்கும்,
- மற்றும் பல வழிகளிலும் வேண்டிய உதவிகள் நல்கிய அனைவருக்கும்,
- அந்தியேட்டி - சபிண்டீகரண நிகழ்வில் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் யாவருக்கும்

**எமது மனமார்ந்த நன்றியினைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.**

*இங்ஙனம்*

*- மக்கள், மருமக்கள்,*
*பேரப்பிள்ளைகள்.*

116/4, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.
02-05-2006.

00 91 9710 376229

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

—பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்—



ஸ்ரீ மீனாட்சி அச்சகம், நல்லூர் - ☎ 2223586